# நம் வழி வேளாண்மை


பருவம் 30 அக்டோபர் – டிசம்பர் 2020 இதழ் 3





**ஆரம்பப்பள்ளி ஆசிரியர் திரு.ரஞ்சித்சின்ஹா திசேலுக்கு நம் வழி வேளாண்மை குழுமம் சார்பாக சிருஷ்டி சன்மான் விருது 2018ல் வழங்கப்பட்டது**

**இவருக்கு உலகளாவிய பரிசுத்தொகை ரூ. 7.50 கோடி டிசம்பர் 2020 ல் கிடைத்துள்ளது.**

## *இயற்கை வழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை*

# நம் வழி வேளாண்மை

பருவம் 30 அக்டோபர் – டிசம்பர் 2020 இதழ் 3

ஆசிரியர்
**பெ. விவேகானந்தன்**

**நம் வழி வேளாண்மை தத்துவம்**

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் சேகரித்து வைக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் பலரும் பயன் பெற வழி வகுக்கின்றது.

**நம்வழி வேளாண்மை குழுமம்**
**பிற மொழி இதழ்கள்**

| | |
|---|---|
| ஆங்கிலம் | – தேனீ (Honey Bee) |
| குஜராத்தி | – லோக் சர்வானி |
| ஹிந்தி | – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி |
| ஒரியா | – அமா அகாபகா |
| தெலுங்கு | – பள்ளி ஸ்ருஜனா |
| கன்னடம் | – ஹித்தலகிடா |
| மலையாளம் | – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே |

**நம் வழி வேளாண்மை**
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலைபேசி : 0452– 2380082, 2380943.
இமெயில் vivekseva@gmail.com

**ஆங்கில இதழ் முகவரி**
Prof. Anil Gupta,
**Honey Bee,**
SRISTI, AES Boys Hostel Campus,
Near Gujarat University Library & SBI Bank,
Navrangpura, Ahmedabad-380 009, Gujarat,
email: honeybee@sristi.org

## தாகத்திலும் விவேகம்

ஒரு சமயம் ஒரு வழிப்போக்கன் பாதை தவறி பாலைவனத்தில் சிக்கிக் கொண்டான். தன்னிடம் உள்ள உணவு, குடிநீர் தீர்ந்து விட்டது. இரண்டு நாட்களாக குடிநீர் கூட அருந்துவதற்கு நீர் கிட்ட வில்லை. இச்சமயத்தில் அவன் கண்ணுக்கு ஒரு குடிசை தென்பட்டது. இக்குடிசை கானல் நீர் போன்ற காட்சியா அல்லது உண்மையா என யோசித்தான். அதன் அருகில் செல்ல நினைத்து சோர்வை களைந்து நடந்து சென்றான். அது உண்மையிலேயே ஒரு குடிசை தான். அதன் கதவை திறந்தான். உள்ளே யாரும் இல்லை. குடிசையை காலி செய்து சென்றிருக்க வேண்டும் எனத்தோன்றியது. குடிசையின் மூலையில் அடி பம்பு இருப்பதைக் கண்டான். ஆவலுடன் சென்று அதை இயக்கிப் பார்த்தான். நீர் வர வில்லை. மீண்டும் குடிசை முழுவதும் நீர் உள்ள பாட்டில் அல்லது பாத்திரம் உள்ளதா என்று தேடிப் பார்த்தான். என்ன ஆச்சரியம் ஒரு தண்ணீர் பாட்டில் இருப்பதைப் பார்த்தான். அந்த பாட்டிலைத் திறந்து குடிக்கலாம் என்று எடுத்தான். பாட்டிலின் மூடியில் ஒரு பேப்பரில் வாசகம் ஒன்று எழுதி இருந்ததைப் பார்த்தான். அந்த பேப்பரில் இதில் உள்ள நீரை அடிபம்பில் ஊற்றி இயக்கினால் நீர் வரும். அந்த நீரைக் கொண்டு இந்த பாட்டிலை மீண்டும் நிரப்பி விடுங்கள் என்ற வாசகம் எழுதி இருந்ததை பார்த்து யோசித்தான். ஒரு வேளை இந்த கடைசி நீரையும் பம்பில் ஊற்றி தண்ணீர் வராமல் இருந்து விட்டால் உயிரே போய்விடுமே என்று குழம்பினான். இருந்தாலும் நிதானத்துடன் பிரார்த்தனை செய்து அந்த நீரை குடித்து விடாமல் அடிபம்பில் ஊற்றி இயக்கினான். என்ன ஆச்சரியம் நீர் குபு குபு வென வெளி வந்தது. வழிப்போக்கனுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி. உயிர் பிழைத்தோம் என்று நினைத்து நீரை வேண்டிய மட்டும் பருகினான். தனக்கு தேவையான நீரையும் தன்னுடைய குடுவையில் நிரப்பிக் கொண்டான். அந்த பாட்டிலிலிருந்து நீர் எடுத்ததால் காலியானதையும் நிரப்பி அந்த பேப்பரையும் அதனுடன் கோர்த்து விட்டான். பின்னர் அங்கே இருந்த வரை படத்தின் மூலம் எவ்வளவு தூரம் கடந்து வந்து விட்டதை தெரிந்து கொண்டான். வாழ்வில் எதை கொடுக்கிறோமோ அது பன்மடங்கு திரும்பி வரும் என்பதற்கு இது எடுத்துக்காட்டு. தாகத்திலும் விவேகத்தைக் கடைபிடித்தான்.

– வாட்ஸ்அப் செய்தி

## புதிய வேளாண்சட்டங்களும் விவசாயிகள் போராட்டமும்

வேளாண் சட்டங்களை திரும்பப் பெறாதவரை எங்கள் சடலங்கள் கூட வீடு திரும்பாது என்று விவசாயிகள் உறுதியாக இருக்கின்றனர். அதே நேரத்தில் போட்ட சட்டத்தை திரும்பப் பெறும் பேச்சுக்கே இடமில்லை என்று அரசாங்கம் கூறி வருகிறது. இரண்டு தரப்பும் இப்படி விடாப்பிடியாக இருக்கக் காரணம் என்ன? ஒப்பந்தச் சட்டத்தை ஆதரிக்கின்றவர்கள் சொல்கிற இரண்டு விசயங்கள் :

1. கஷ்டப்பட்டு விளையவைத்த பொருளை இனி நஷ்டத்துக்கு இடைத்தரகர்களிடம் அள்ளிக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

2. ஏதோ ஒரு கம்பெனியுடன் சட்டப்படி ஒப்பந்தம் போட்டுக் கொண்டால் விதை, உரம் மற்றும் விவசாய செலவுக்கான பணம் மட்டுமல்ல விளைந்த பொருளை கம்பெனியே எடுத்துக்கொண்டு காசை கொடுத்து விடும்.

இதைக் கேட்பதற்கு இனிப்பாக உள்ளது. இதில் கம்பெனிகள் தலையிட்டால் விவசாயத்திற்கு முன் பணம் கொடுப்பார்கள் என்பது உண்மைதான் எவ்வளவு தெரியுமா? வெறும் 10 சதவிகிதம் மட்டும் தான். உதாரணமாக ஒரு போகம் விளைச்சலுக்கு ஒரு இலட்ச ரூபாய் செலவாகுமென்றால் ரூ. 10,000 மட்டும் முன் பணமாக தருவார்கள். பாக்கி ரூ. 90,000 விவசாயி தன் பாக்கெட்டிலிருந்துதான் போடணும். ஒரு தடவை விளையவில்லை என்றால் அடுத்த தடவையும் விவசாய செலவுக்கு பணம் கொடுப்பார்கள். ஆனால் முன்பணமாக பெற்ற அந்த ரூ. 10,000 பணம் அப்படியே நிலுவையாக தொடரும். தொடர்ந்து பத்து நிலுவைத் தொகை பாக்கி நிற்குமானால் ஒப்பந்தம் செய்து கொண்ட நிலம் ஒப்பந்த கம்பெனி வசம் வந்து விடும் என்று கூறுகிறார்கள். அரசு கொண்டு வந்த 3 சட்டங்கள்:

1. அத்தியாவசியப் பொருட்கள் திருத்தச் சட்டம் 2020. இந்தியாவில் வெங்காயம், பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலை உயரும்போது, அவற்றை ஏற்றுமதி செய்யவும், சேமித்து வைக்கவும் அரசு அவ்வப்போது கட்டுப்பாடுகளை விதிக்கிறது. இப்போது வந்துள்ள சட்டத்திருத்தத்தின்படி விவசாயத்துறைக்கு முதலீடுகளை அதிகரிக்கும் விளைபொருட்களை உற்பத்தி செய்யவும், சேமித்து வைக்கவும், வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லவும், விற்பனை செய்யவும், விவசாயிகளுக்கு முழுச்சுதந்திரம் அளிக்கப்படும் அதோடு அந்நிய முதலீடு விவசாயத் துறையில் கிடைக்குமென்றும், அதனால் விவசாயத் துறைக்குத் தேவையான குளிர்பதனக் கிடங்குகள் போன்றவற்றைக் கட்டத் தேவைப்படும் முதலீடு கிடைப்பதை எளிதாக்கும் என மத்திய அரசு கூறுகிறது.

2. விவசாய விளைபொருள், வியாபாரம் மற்றும் வர்த்தகச் (மேம்பாடு மற்றும் எளிமைப்படுத்துதல்) சட்டம் 2020. இது விவசாய விளை பொருட்களை மாநிலத்திற்கு உள்ளேயும், வெளியேயும் வர்த்தகம் செய்ய வழி வகுக்கிறது. இதன் மூலம் விவசாயிகளுக்குத் தங்கள் உற்பத்திப் பொருட்களுக்குக் கூடுதல் விலை கிடைக்குமென அரசு கூறுகிறது. இந்தச் சட்டத்தினால் விவசாய வர்த்தகத்தின் மீது மாநில அரசு கொண்டிருக்கும் கட்டுப்பாடு இல்லாமல் போகலாம். உதாரணத்திற்கு தமிழகத்தில் விளையும் நெல்லினை அதிகமாக மற்ற மாநிலங்கள் வாங்கிச் செல்லலாம். இதனால் தமிழகத்தில் நெல்லுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சமும் உள்ளது.

3. விவசாயிகளுக்கு (அதிகாரமளித்தல் மற்றும் பாதுகாப்பு) விலை உத்தரவாத ஒப்பந்தம் மற்றும் விவசாயச் சேவைகள் சட்டம் 2020). விவசாயிகளுடன் எந்த மூன்றாவது நபரும் ஒப்பந்தம் செய்து கொள்ள இந்தச் சட்டம் வழி வகுக்கிறது. இது வரை ஒரு விவசாயி, தான் விளைவித்த விளை பொருளுக்குத் தானே குறைந்தபட்ச அடிப்படை ஆதார விலையை நிர்ணயிக்க முடியாத நிலை இருந்தது.

உதாரணத்துக்கு ஒரு விவசாயி, ஒரு கிலோ கேரட் ரூ. 100 என மொத்தமாக மண்டியில் (வாங்க வருபவர்கள் கூடுமிடம்) கொடுத்து விடுவார். அங்கு வரும் இடைத்தரகர்கள், அதனை வாங்கி ரூ.150 க்கு லாபம் வைத்து, ரூ.250 என கடைக்காரரிடம் கொடுப்பார்கள். அந்தக் கடைக்காரர் ரூ.100 லாபம் வைத்து ரூ. 350 க்கு விற்பார். நுகர்வோரும் அந்த விலை கொடுத்து வாங்குவார்கள். தற்போது இயற்றப்பட்ட சட்டத்தின் மூலம் ஒரு விவசாயி, தான் விளைவித்த பொருளை நேரடியாகக் கடைக்காரரிடம் விற்க வாய்ப்பு உள்ளது. எங்கு கூடுதல்விலை கிடைக்கிறதோ அது வெளிமாநிலமாக இருந்தாலும் சரி அங்கு விற்கலாம். இதன் மூலமாக விவசாயியின் கையே ஓங்கி இருக்கும். இடைத்தரகர்கள் முறை நீங்கும்.

**இந்தச் சட்டங்களால் ஏற்படக்கூடும் பாதிப்பு**

இந்தச் சட்டங்களை எதிர்க்கும் விவசாய இயக்கங்களில் தலைவர்களில் ஒருவரான யோகேந்திர யாதவ் இது தொடர்பாகக் கூறும்போது, “இவர்கள் மண்டி முறையையே ஒழிக்கப் பார்க்கின்றனர் என்கிறார்”. திறந்த சந்தை என்ற பெயரிலான சந்தையானது செயல்பாட்டுக்கு வந்து விடும். பின்னர் விவசாயப் பொருட்களுக்கு இவர்கள் வைப்பதுதான் விலை. முதலாளிகள், கார்ப்பரேட்கள் இந்தப் பொருளுக்கு இன்னவிலைதான் கொடுக்க வேண்டுமெனத் தங்களுக்குள் நிர்ணயித்துக் கொள்வார்கள். நாளடைவில் மிகப்பெரிய அளவில் கார்ப்பரேட்களின் அடிமைகளாக நமது விவசாயிகள் மாறக்கூடும். குறைந்தபட்ச ஆதார விலை குறித்து இந்த 3 சட்டங்களிலும் எதுவும் நேரடியாகவோ மறைமுகமாகவோ குறிப்பிடவில்லை, போகப்போகக் குறைந்தபட்ச ஆதார விலை கொடுத்து அரசு கொள்முதல் செய்வதை நிறுத்துவதற்கான முன்னோடிதான் இது என இந்தத் துறை சார்ந்த நிபுணர்கள் கருதுகின்றனர். – நன்றி: நமது மண்வாசம் – மண்–6 வாசம் –5 ஜனவரி – 2021

## நிலக்கடலையை பிரித்தெடுக்கும் கருவி, கொப்பரை தேங்காயை இரண்டாக வெட்டும் கருவி

நிலக்கடலை பிரித்தெடுக்கும் கருவி



கொப்பரை தேங்காய் வெட்டும் கருவி



இந்த இரண்டு கருவிகளையும் திரு. செந்தில் உருவாக்கியுள்ளார். இதுவரை நிலக்கடலை பிரித்தெடுக்கும் 36 கருவிகள், தேங்காய் வெட்டும் கருவி 25 கருவிகள் விற்பனை செய்துள்ளார்.

எஸ். செந்தில் நிலக்கடலை பிரித்தெடுக்கும் கருவி இரண்டு மாடல்கள் தலா ரூ. 8,000/– ரூ. 12,000/= க்கு விற்பனை செய்கிறார். தேங்காய் வெட்டும் கருவி ரூ. 7,000/– க்கு விற்பனை செய்கிறார்.

திரு. செந்தில்
த/பெ. சுப்பிரமணியன்
தாண்டவன் லேத் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்
சிவகங்கை ரோடு, மேலூர், மதுரை மாவட்டம்
செல் : 9751100383

## இயற்கை அரிசியை நேரடியாக விற்று லாபம் சம்பாதித்தல்



திரு. தங்கராஜ் (வயது 60) எஸ்.எஸ்.எல்.சி வரை படித்துவிட்டு பஸ் கண்டக்டராக வேலை பார்த்து விருப்ப ஓய்வின் பேரில் சொந்த ஊரான கரூர் மாவட்டம், நொய்யல் கிராமத்திற்கு வந்து விவசாயம் செய்கிறார். இவர் 2 ஏக்கரில் தென்னையும், 1 ஏக்கரில் நெல்லும் பயிர் செய்து வருகிறார். இவர் கடந்த 3 ஆண்டுகளாக இயற்கை விவசாய முறைகளை கடைப்பிடித்து வருகிறார். இவர் நெல்லை அறுவடை செய்து ரைஸ்மில்லில் கொடுத்து வேக வைத்து புழுங்கல் அரிசியாக அரைத்து பின் தெரிந்த நண்பர்களுக்கு விற்று விடுகிறார். இதனால் ஓர் ஏக்கரில் ரூ. 50,000க்கும் குறைவில்லாமல் நிகர வருமானம் எடுப்பதாகக் கூறுகிறார். இவர் கடைபிடிக்கும் வேளாண்மை முறைகள் பின்வருமாறு: முதலில் நாற்றங்கால் தயார் செய்கிறார். நாற்றங்காலில் சணப்பு விதைத்து 45 நாட்களில் நிலத்தோடு உழுது விடுகிறார். பின்னர் வேப்பம் பிண்ணாக்கு 5 கிலோ, கடலை பிண்ணாக்கு 2 கிலோ கலந்து நிலத்திற்கு இடுகிறார். உழவு செய்யும்முன் குப்பை இடுகிறார். பத்து சென்ட் நிலத்தில் 25 கிலோ விதை நெல் விதைக்கிறார். இவர் வெள்ளை பொன்னி என்ற நெல் ரகத்தை பயிர் செய்கிறார். இதனுடைய வயது 140 நாட்களாகும். நெல் விதைத்த 15 – 20 நாட்களில் பிடுங்கி நடவு செய்கிறார்.

நெல்லை 1 x 3/4 அடி இடைவெளியில் நடவு செய்கிறார். நெல் நடுவதற்கு முன் சணப்பு விதைத்து 45வது நாளில் மடக்கி உழுது விடுகிறார். இத்துடன் வேப்பம் பிண்ணாக்கு 50 கிலோ, கடலை பிண்ணாக்கு 25 கிலோ இடுகிறார். நெல் நட்ட 20 வது நாளிலிருந்து 4–5 முறை மூலிகை பூச்சிக் கொல்லி மருந்து மற்றும் பஞ்சகவ்யா மாறி மாறி தெளித்து வருகிறார். இவர் மூலிகை பூச்சிக் கொல்லி மருந்து, பஞ்சகவ்யாவை தயாரிப்பதில் வேலைப்பாடு அதிகம் இருப்பதால் இவர் பக்கத்து ஊரில் கருக்கம்பாளையம் செல்லமுத்து என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கி கொள்கிறார். ஒரு லிட்டர் மூலிகை பூச்சி விரட்டி / பஞ்சகவ்யா ரூ. 100க்கு விலைக்கு வாங்கி கொள்கிறார்.

**பயிருக்கு உரம், மருந்து தெளிக்கும் முறை பின் வருமாறு:**

1) 25 வது நாள் – பூச்சி விரட்டி தெளித்தல்
2) 40 வது நாள் – பஞ்சகவ்யா தெளித்தல்
3) 55 வது நாள் – பூச்சி விரட்டி + பஞ்சகவ்யா தெளித்தல்
4) 70 வது நாள் – பஞ்சகவ்யா + பூச்சி விரட்டி தெளித்தல்

இவர் நட்ட 40 வது நாளில் ஓர் ஏக்கருக்கு 2 பெண்களை வைத்து வயலில் பாசங்களை நீக்கி கிளறி விடுகிறார். இதனால் களை செடிகள் அதிகம் வளராது. இவர் நெல்லை 140 நாட்களுக்குள் அறுவடை செய்து விடுகிறார். ஏக்கருக்கு 8 1/2 பொதிக்கு குறையாமல் விளைச்சல் எடுக்கிறார் (2,210 கிலோ). இந்த நெல்லை கரூருக்கு எடுத்து சென்று ரைஸ்மில்லில் கொடுத்து புழுங்கல் அரிசியாக அரைத்து விடுகிறார். அரைத்து முடித்ததும் அரிசியை 25 கிலோ சிப்பங்களாக சாக்கு பைகளில் போட்டு நண்பர்களுக்கு விநியோகம் செய்து விடுகிறார். ஒவ்வொரு குடும்பத்தாரும் சுமார் 10 சிப்பங்களாக வாங்கி வைத்துக் கொள்கின்றனர். இயற்கை முறையில் நெல் சாகுபடி செய்வதால் இந்த அரிசியில் சமைக்கும் போது சாப்பாடு ருசியாக உள்ளது. இந்த அரிசியை பல மாதங்கள் வீட்டில் சேமித்து வைத்தாலும் வண்டுகள் விழாது.

**இயற்கை தென்னை சாகுபடி**

இவர் 2 ஏக்கரில் தென்னை நட்டுள்ளார். தென்னை மரங்கள் 4 வருடங்களுக்குள் பலனுக்கு வந்து விட்டன. தென்னைக்கு பசுமாட்டு பண்ணையிலிருந்து கிடைக்கும் கோமியம், சாணம் கலந்து குழாய் மூலம் வாய்க்கால் அருகே கொண்டு



செல்லப்படுகிறது. அங்கே ஒரு ட்ரம்மை வைத்து இதில் மாட்டு கோமியம், சாணம் கலந்த கரைசலை ஒரு அவுட்லட் கொடுத்து அடிப்புறத்திலிருந்து சிறிது சிறிதாக வடிந்து வாய்க்காலில் நீரில் கலக்குமாறு செய்துள்ளார். இதனால் தென்னைக்கு பாய்ச்சப்படும் பாசன நீர் சத்துள்ளதாக ஆகி விடுகிறது. தென்னைக்கு ஊடே சணப்பு விதைத்து 45 வது நாளில் உழுது விடுகிறார். இதனை வருடத்தில் 3 முறை செய்து வருகிறார். சணப்புடன் பல தானிய பயிர் விதைகளையும் சேர்த்து விதைக்கிறார். இது தவிர ஒரு தென்னைக்கு குப்பை 2 கூடை மற்றும் காம்ப்ளக்ஸ், சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ் தலா 1/2 கிலோ வைக்கிறார். செயற்கை உரங்களுக்கு பதில் பிண்ணாக்கு கலவையை மரத்திற்கு 2 கிலோ அளவு வைக்க முடிவு செய்துள்ளார்.

**சொந்த டிராக்டரை பயன்படுத்துதல்**



இவருக்கு மொத்தம் 3 ஏக்கர் நிலமிருந்தாலும் புது டிராக்டரை (37 ஹெச்.பி) விலைக்கு வாங்கி தனது நிலத்திற்கு மட்டும் இவரே ஓட்டி பயன்படுத்துகிறார். வெளியே வாடகைக்கு கொண்டு செல்லுவதில்லை. இவர் ட்ரெய்லரில் உயரம் குறைவாக (2 அடிக்குள்) உள்ள மாடலை தேனியில் ஒரு லேத்தில் ரூ. 80,000 வாங்கி பயன்படுத்துகிறார். இதனால் தென்னை காய்களை தூக்கி போடும் சமயம் சிரமம் இல்லை. ஈரோட்டில் கிடைக்கும் ட்ரெய்லர் உயரம் அதிகம் உள்ளதால் சிரமம் உள்ளது. ஆனால் கொள்ளளவு சற்று குறைவு ஆனாலும் பிரச்சனையில்லை. இந்த ட்ரெய்லரின் மூன்று பக்க இரும்பு பலகையை மூன்று புறமும் படுக்கை வசத்திற்கு கொண்டு வரலாம். இதனால் இதில் லோடு செய்வது எளிதாக உள்ளது.

## நெல்லுக்கு வந்த வருமானம்

**செலவு :** நாற்று விட்டது செலவு –ரூ.500, உழவு – ரூ.500, பஞ்சகவ்யம் – ரூ. 200, பூச்சி விரட்டி – ரூ. 100, நடவு நட்டது –ரூ. 4200, ஆள்கூலி வரப்பு கட்டியது – ரூ. 5,000, டிராக்டர்க்கு சேற்றுஉழவுக்கு– ரூ. 6,000,மருந்து அடிக்க– ரூ. 1,000,களை எடுக்க – ரூ.1,200, மருந்து அடிக்க ரூ. 800, நெல் அறுவடைக்கு– ரூ.12, 000, நெல் அள்ள ரூ. 800, நெல் வேக வைத்து அரைக்க ரூ. 6,900, டெம்போ வாடகை ரைஸ்மில் செல்ல ரூ. 600,

மொத்த செலவு – ரூ. 39,800

**வருமானம்:**

அரிசி 37 சிப்பம் விற்றது ரூ. 59,200, குருணை 5 சிப்பம் ரூ. 8,000, நெல் தவிடு 5 மூட்டை ரூ. 9,600, நெல் வைக்கோல் ரூ. 15,000, மொத்த வருமானம் – ரூ.91,800, செலவு ரூ. 39,800, நிகர லாபம் – ரூ.52,000 ஓர் ஏக்கருக்கு.

பி. தங்கராஜ்
55, வெள்ளியம்பாளையம், நொய்யல் அஞ்சல்,
புகழூர் தாலுகா, கரூர் மாவட்டம், செல் :9443767337

## கோழிகளுக்கு எதிர்ப்பு சக்தி உண்டாக்க

கோழிகளுக்கு வரும் கழிச்சல் மற்றும் அனைத்து விதமான நோய்களுக்கு எதிர்ப்பு சக்தி உண்டாக்க புதிதாக பறிக்கப்பட்ட மஞ்சள், வெள்ளை பூடு, வெங்காயம் இவைகளை சம அளவு எடுத்து அரைத்து சாறு எடுத்து ஒவ்வொரு கோழிக்கும் 10 சொட்டு உள்ளே கொடுக்க வேண்டும். சாறு எடுத்தது போக மீதியுள்ள கசடை கோழித் தீவனத்துடன் கலந்து கொடுக்கலாம்.

டி. தனபாலன், கால்நடை ஆய்வாளர்
குளிரமா, அய்யப்பன் காவு, கடம்கோடு, கரிஸ்காரப்புள்ளி அஞ்சல், பாலக்காடு –678551, கேரளா. செல் : 9400600589

# அடித்தள கண்டுபிடிப்பாளர்கள் கருத்தரங்கம்



அடித்தள கண்டுபிடிப்பாளர்கள் கூட்டம் 13.12.2020 அன்று ஞாயிற்றுக்கிழமை திண்டுக்கல் மாவட்டம் பள்ளபட்டி கிராமம் முருங்கை அழகர்சாமி தோட்டத்தில் ஒரு நாள் கருத்தரங்கமாக நடைபெற்றது. இதில் தமிழ் நாட்டில் பல மாவட்டங்களிலிருந்து கண்டுபிடிப்பாளர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்திற்கு அடிமட்ட கண்டுபிடிப்பாளர்கள் சங்கத்தலைவர் திரு. கந்தராஜ் முன்னிலை வகித்தார். மதுரை சேவா நிர்வாக இயக்குநர் திரு. விவேகானந்தன் தலைமை ஏற்றார். இக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்களை அழகர்சாமி வரவேற்றார். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட கண்டுபிடிப்பாளர்கள் சுய அறிமுகம் செய்து கொண்டு தங்கள் கண்டுபிடிப்புகளை விவரமாக எடுத்து கூறினார்கள். மதிய உணவுக்கு பின் அழகர்சாமியின் இயற்கை முருங்கை தோட்டத்தை உறுப்பினர்கள் சுற்றி பார்த்தனர். பின்னர் சங்கத்தின் ஆண்டு அறிக்கை, வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டது. சங்க கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக இன்சூரன்ஸ் கம்பெனி மேலாளர் (ஓய்வு) திரு. சார்லஸ் ஆசீர்வாதம் கலந்து கொண்டு கண்டுபிடிப்பாளர்களின் முயற்சிகளை பாராட்டினார். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் அழகர்சாமியின் புதிய முருங்கை ரக கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. சங்கத்தின் செயலாளர் நன்றியுரை கூறினார்.

# பாக்கு மட்டை தயார் செய்யும் கருவி

நாமகிரிப்பேட்டை சின்னக்கண்ணு வடிவமைத்துள்ள பாக்கு மட்டை தயாரிக்கும் கருவி மூலம் 8 மணி நேரத்தில் 1500 பிளேட் தயாரிக்கலாம். இதன் மூலம் ஒரு நாளைக்கு ஒரு நபர் ரூ. 1000/– வரை வருமானம் ஈட்டலாம். இது ஒரு டன் எடை கொண்டது. இதன் விலை ரூ. 2,75,000 ஆகும். இது வரை 300 மிஷின்கள் கர்நாடகா போன்ற பிற மாநிலத்தவர்கள் இதை வாங்கி பயன்படுத்தி வருகின்றனர்.

எம். சின்னக்கண்ணு
ஸ்ரீ அம்மன் இன்ஜினியரிங்ஸ்
தொ.பச்சுடையம்பாளையம், நாமகிரிப்பேட்டை
ராசிபுரம் தாலுகா, நாமக்கல் மாவட்டம் – 637406
செல் : 9787034139, 9787643150

# அப்துல்லாவின் மாட்டு வைத்தியம்

அப்துல்லா (வயது 45) கடந்த 10 ஆண்டுகளாக கால்நடைகளுக்கு மூலிகை வைத்தியம் செய்து வருகிறார். இவர் கட்ச் பகுதியில் நயசர்கு கிராமம் கர்வா தாலுகா, பூஜ் மாவட்டம் என்ற ஊரில் வசித்து வருகிறார். இவரிடம் 22 பசு மாடுகளும் 45 எருமைகளும் உள்ளன. இவர் கூட்டுக் குடும்பத்தில் வசித்து வருவதால் அனைத்துக் கால்நடைகளையும் இவரே பராமரித்து வருகிறார். இவர் கடைப்பிடிக்கும் உத்திகள் பின்வருமாறு:

**கால்காணை மற்றும் வாய்காணைக்கு**

இந்நோயினால் வரும் புண்களுக்கு கடுகு எண்ணெய் 50 மி.லி. யுடன் சப்போட்டா பால் 10 மி.லி சேர்த்து 5 நாட்களுக்கு வாய் பகுதியில் இட வேண்டும்.

**மடிநோய்க்கு**

பால்தரும் மாடுகளுக்கு மடிநோய் வந்தால் பால் திரள் திரளாக வரும். பாலின் அளவு குறையும். இதற்கு நாட்டு சர்க்கரைத்தூள், 100 கிராம், தேங்காய் 1, வெள்ளைப்பூடு 250 கிராம் சேர்த்து அரைத்து 2 உருண்டைகள் பிடித்து 2 நாட்களுக்கு தர வேண்டும். அதாவது ஓர் உருண்டை ஒரு நாளைக்கு.

**மாடு கழிந்தால்**

மோர் 500 மி.லியில் மிளகு 50 கிராம் தூள் சேர்த்து உள்ளே தர வேண்டும்.

## கண்மாய் வாய்க்கால் வெட்டிய பாரதிதாசன்



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தாலுகா தஞ்சாக்கூர் கிராமத்தில் திரு. இந்தியபாரதிதாசன் (47) வசித்து வருகிறார். இவர் பள்ளியில் 7 வது வகுப்பு வரை படித்து பின் நின்றுவிட்டார். இவர் புதிய களை எடுக்கும் இயந்திரம் ஒன்றை பல ஆண்டுகளாக வடிவமைத்து வருகிறார். மானாமதுரை தாலுகா மாறநாடு கண்மாயிலிருந்து தஞ்சாக்கூர் வரை தூர்ந்துபோன பொட்டல் வாய்க்காலை சுமார் 2 கி.மீ. வரை 4 நபர்களுடன் சேர்ந்து சீரமைத்துள்ளார். இதே போல் பொட்டல் வாய்க்காலை சேர்ந்த துணை வாய்க்காலையும் தூர்வாரியுள்ளார்.

சித்திரி வாய்க்கால் என்பது மாற நாடு கிராமத்திலிருந்து ஆவடி நத்தம் வரை 3 கி.மீ. தூரம் உள்ளது. இதை 10 நாட்களில் 4 நபர்களுடன் தூர்வாரியுள்ளார். இதனால் 250 ஏக்கர் பாசனத்திற்கு கண்மாய் நீர் பயன்படுகிறது. நடுக்கனேந்தல், புலவுசேரி இரண்டு ஊர்களில் கண்மாய் மதகுகளை சுத்தம் செய்துள்ளார். இதனால் பாசன நீர் தங்கு தடையின்றி வயலுக்கு செல்கிறது. வரத்துக்கால்வாய்களையும் சுத்தம் செய்துள்ளார். தஞ்சாக்கூர் ஊரில் சின்ன ஊரணி, பெரிய ஊரணிகளில் தாமரை முளைத்ததால் கொசு பெருகி நீர் துர்நாற்றம் வீசியது. இதனால் ஆடு மாடுகள் நீர் குடிக்க முடியவில்லை. இதை இவர் தனி நபராக தாமரைச் செடிகளை சுத்தம் செய்துள்ளார். இதனால் தற்சமயம் மீன்களும் வளர்கின்றன. வருடத்திற்கு ரூ. 50,000 மீன் பிடிப்பிற்கு குத்தகை பணமாக கிராமத்திற்கு கிடைத்து வருகின்றது. இவருடைய தனி மனித முயற்சிகளுக்கு பாராட்டுக்கள். கிராமங்களில் கோடையில் ஊரணி, கண்மாய்களில் மீன் பிடிப்பதற்கு ஏலம் விடுவார்கள். குறைவாக இருக்கும் நீரை மோட்டார் வைத்து வெளியேற்றி மீன் பிடிப்பார்கள். இதனால் கால்நடைகளுக்கு குடி தண்ணீர் கிடைக்காமல் கஷ்டங்கள் ஏற்படும். இதற்கு இவருடைய யோசனைப்படி கீழ்க்கண்ட முறையில் மீன் பிடிக்கலாம். அதாவது வாளியின் அடிப்பகுதியில் சிறு துளைகள் போட வேண்டும். வாளியின் உட்புற பகுதியில் கஞ்சி பசை கெட்டியாக பூசி விட வேண்டும். இந்த வாளியை நீரில் மூழ்கி வைத்து விட்டால் மீன்கள் உள்ளே வந்து கஞ்சி பசையை அருந்த வரும். இச்சமயத்தில் வாளியை அப்படியே தூக்கினால் நீர் அடிப்பகுதியின் தூரில் உள்ள துவாரங்கள் வழியாக வழிந்துவிடும். மீன்களை எளிதாக சேகரித்து கொள்ளலாம்.

இந்திய பாரதிதாசன்
தஞ்சாக்கூர் கிராமம், மானாமதுரை தாலுகா
சிவகங்கை மாவட்டம், செல் : 9047290676

## மரத்திருகு



விருதுநகர் மாவட்டம், அச்சன்குளம் கிராமத்தில் திரு. பிச்சைமுருகன் வாகை மரத்திலான மரத்திருகு ஒன்றை வடிவமைத்துள்ளார். அடிப்பகுதி மரத்திருகில் கொத்து வைத்துள்ளார். இதனால் நெல் போன்ற தானியங்களை 4 சுற்றுகளில் அரைத்து விடலாம். தற்பொழுது இதனை வடிவமைக்க ரூ. 15000 வரை செலவழித்துள்ளார். இதில் சுற்றுவது மிகவும் எளிதாக உள்ளது. இதன் விலையை குறைக்க முயற்சி செய்து வருகிறார்.

பிச்சைமுருகன்
அச்சன்குளம், ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலுகா,
விருதுநகர் மாவட்டம். செல் : 9362794206

## பிராணிகள் ஆப்ரேஷன் மேஜை

இம்னாமீரன் (வயது 51) நாகலாந்து மாநிலத்தில் திமாக்கூர் அருகே சுஹோய் கிராமத்தில் வசித்து வருகிறார். இவர் வனப்பகுதியில் ஆதிவாசிகள் வசிக்கும் இடத்தில் தச்சுத் தொழில் செய்து வருகிறார்.



இங்கு கால்நடைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு சிரமங்கள் உள்ளன. கால்நடை மருத்துவர் மிக தூரத்தில் உள்ளார். கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க லெகுவான ஒரு படுக்கை ஏற்படுத்தி (Operation Table) கண்காணிக்க இம்னாமீரனும் அவரது மனைவியும் யோசித்தனர்.



இதன்படி கால்நடைகளை அல்லது வீட்டு செல்லப் பிராணிகளை பரிசோதிக்க ஒரு மேஜையை உருவாக்கினர். இந்த படுக்கை வசதி கொண்ட மேஜையில் பிராணிகளை கிடத்தி பரிசோதனை செய்யலாம். இதில் பிராணிகள் அசையாமல் இருக்க இதன் கால்களை இறுக்கமாக அசையாமல் வைக்க பெல்ட் வசதி உண்டு. இப்பகுதியில் வளர்க்கப்படும் பன்றிகளை இதில் கிடத்தி நன்கு கண்காணிக்கலாம். இந்த மேஜையின் எடை 25 கிலோ. இதன் விலை ரூ. 18,000 ஆகும். இவர் மரவள்ளிக்கிழங்கிலிருந்து சிப்ஸ் வெட்டும் கருவியையும் வடிவமைத்துள்ளார். இவருக்கு தேசிய கண்டுபிடிப்பாளர் அறக்கட்டளையின் சார்பாக பரிசு கிடைத்துள்ளது.

## விறகு மிச்சமாகும் சுடுகாடு



குஜராத் மாநிலத்தில் ஜுனாகத் மாவட்டத்தில் கேசோட் என்ற கிராமத்தில் அர்ஜுன்பாய் (58) வசித்து வருகிறார். இவருக்கு தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளையிலிருந்து விறகு குறைவாக பிடிக்கும் சுடுகாடு வடிவமைத்ததற்காக 2019ம் ஆண்டிற்கான விருது கிடைத்துள்ளது. இவர் விறகு உடைக்கும் ஹைட்ராலிக் இயந்திரத்தையும் உருவாக்கியுள்ளார். சாதரணமாக சுடுகாட்டில் ஒரு பிணத்தை எரிக்க சுமார் 400 கிலோ விறகு தேவைப்படும். இதனால் தேசிய அளவில் நித்தமும் பல லட்சக்கணக்கான டன் விறகு செலவாவது உண்மை. இவர் சுடுகாட்டில் பிணத்தை மூடும் முறையில் வடிவமைத்து விறகு செலவாவதை 70 சதவீதம் குறைத்துள்ளார். பிணம் எரிவது 3 மணியிலிருந்து 1 1/2 மணி நேரமாக குறைந்து விடும். இதற்கு 70–80 கிலோ விறகு மட்டும் போதுமானது.

### விறகு வெட்டும் கருவி



பிணத்தை எரிப்பதற்கு தேவையான விறகை கோடாலியால் வெட்டும் வேலையை எளிதாக்க ஹைட்ராலிக் முறையில் மின்சாரம் மூலம் இயங்கும் ஒரு கருவியை உருவாக்கியுள்ளார். இதை சுடுகாட்டுக்கு அருகிலேயே அமைத்துள்ளார்.

சில ஊர்களில் டீசல் உபயோகித்து பிணத்தை எரிக்கின்றனர். இந்த முறையில் 25 லிட்டர் டீசல் செலவாகும். டீசல் உபயோகிக்கும் சமயம் 1 1/4 மணி நேரத்தில் எரித்து விடலாம். ஆனால் இதிலிருந்து கிளம்பும் புகை சுற்றுச் சூழலை மாசுபடுத்தி விடும். ஒரு குழந்தை பிறக்கும் சமயம் எந்த அளவு எடை உள்ளதோ அந்த அளவு பிணம் எரித்த பின் சாம்பல் கிடைக்கும் என்று இவர் கூறுகிறார். உதாரணமாக ஒரு குழந்தை பிறக்கும் சமயம் 3 கிலோ பிறப்பு எடை இருந்தால் அவர் இறந்த பின் 3 கிலோ எரித்த சாம்பல் கிடைக்கும். நகராட்சி சுடுகாடுகளில் ஒரு பிணத்தை எரிக்க ரூ. 1000 கட்டணமாக காசோடு நகரில் வசூல் செய்கிறார்கள். சுடுகாட்டில் பிணத்தை எரிக்கும் சமயம் சில வேத மந்திரங்களை உச்சரிக்குமாறு ஆடியோ சாதனத்தையும் சுடுகாட்டில் ஏற்படுத்தியுள்ளார்.



காசோடு கிராமத்திற்கு அருகே புராணகாலத்தில் வாழ்ந்த ஸ்ரீ கிருஷ்ணர் எரிக்கப்பட்ட சுடுகாடு உள்ளதாக இவ்வூர் மக்கள் நம்புகின்றனர். அந்த இடத்தில் பல ஊர்களிலிருந்து பிணங்கள் கொண்டு வரப்பட்டு எரிக்கப்படுகின்றன. இந்த இடத்தை பால்கா தீர்த்தம் (வெரவால் ஊரில் உள்ளது) என்றும் அழைக்கின்றனர்.

Arjunbhai, M. Paghdar
Junagadh, Gujarat
Cell : 9904119954

## பசு வளர்ப்பிலிருந்து எருமைக்கு மாறுதல்



குஜராத் மாநிலம் கட்ச் பகுதியில் 50 ஆண்டுகளுக்கு முன்னர் பசு பாரமரிப்பு நடந்து வந்தது. சிந்து முஸ்லிம் மால்தாரி இனத்தவர் பொது மேய்ச்சல் தரையில் மாடுகளை மேய்த்து வந்தனர். இங்கு பன்னி என்ற மேய்ச்சல் நிலம் சுமார் 2500 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ளது. 1975 ஆம் ஆண்டு இப்பகுதியில் சில இடங்களில் சீமக்கருவேலை அறிமுகப்படுத்தினர். இது எல்லா இடங்களிலும் பரவி 60 சத நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து விட்டது. இதனால் மேய்ச்சல் நிலமும் பாதிக்கப்பட்டது. பல தாவரபுற்கள் அழிந்து விட்டன. நாட்டு கருவேல் மரம், வன்னிமரம் அரிதாகிவிட்டன. முட்கள் நிறைந்த பகுதியில் பசுவை விட எருமையே தாக்குப்பிடித்தது. இது தவிர முன்னர் உழவு மாடுகளுக்கு நல்ல கிராக்கி இருந்ததால் பசு வளர்ப்பு ஆதாயமாக இருந்தது. தற்சமயம் உழவு மாடுகளின் பயன்பாடு முற்றிலும் குறைந்து விட்டதால் பசுவை விட எருமை வளர்ப்புக்கு மக்கள் மாறி விட்டனர். எருமை பாலுக்கு ரூ. 45 (லிட்டருக்கு) அல்லது அதிகம் கொழுப்பு சத்தை பொறுத்து கிடைக்கிறது. இதனால் கட்ச் பகுதியில் உள்ள மால்தாரி இனத்தவர் எருமைகளை வளர்க்கின்றனர். எருமைகள் சுயமாக மேய்ச்சல் தரைக்கு சென்று மேய்ந்து விட்டு தானாக வீடு திரும்பும். மாலை பொழுது பால் கறவைக்கு பின் மேய்ச்சல் நிலத்திற்கு சென்று விடும். இரவு முழுதும் மேய்ச்சல் தரையில் மேய்ந்து விட்டு அதிகாலை வீடு திரும்பும். இதனால் எருமை பராமரிப்பு செலவு குறைகிறது. இந்த மக்களுக்கு சொந்த நிலமில்லை. பொது மேய்ச்சல் தரையை நம்பியுள்ளனர். ஒவ்வொரு வீட்டிற்கும் 50–200 எருமை மாடுகள் உள்ளன. எருமை சுமார் 8–10

லிட்டர் பால் கறக்கும். இதனால் நல்ல வருமானம் கிடைக்கிறது. இந்த எருமை இனம் பன்னி இனம் என்று கூறப்படுகிறது.

முஸ்லிம் இன மக்கள் வயதான காளை எருமைகளை இறக்கும் வரை வைத்திருந்து புதைத்து விடுகின்றனர். இப்பகுதியில் யாரும் குடிப்பது, சூதாடுவது கிடையாது. கள்வர் பயமில்லை. பெண்கள் பருவத்திற்கு வரும் வரை பள்ளி செல்லுகின்றனர். பின்னர் நின்று விடுகின்றனர். தற்சமயம் மேய்ச்சல் நிலத்தை பாதுகாக்கப்பட்ட வனமாக மாநில அரசு அறிவித்து கால்நடை மேய்ச்சல் அனுமதியை மறுக்கின்றனர். இதனால் இப்பகுதியில் இம்மக்கள் ஒன்று சேர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். ஜனவரி மாதம் 9–12 தேதியில் நடந்த பன்னி மேய்ச்சல் பாதுகாப்பு நடை பயணம் நடைபெற்றது. இதில் மதுரை சேவா நிறுவனத்திலிருந்து திரு. விவேகானந்தன் கலந்து கொண்டார். இப்பகுதியில் ''சீமைக்கருவேல் அகற்றப்பட வேண்டும், தங்குதடையின்றி மேய்ச்சலுக்கு அனுமதி வேண்டும்''. என்ற கோசங்கள் நடை பயணம் முழுவதும் கிராமங்களில் முழங்கின.

Amirfaizal M. Mutva
Convener of Muslim Rashtriya Munch
Kachchh District
Cell : 9429171081, 9512987800

## கட்ச் பகுதி கால்நடை வைத்தியம்

**காணை நோய்க்கு**

கருவாட்டு புகையை தொழுவத்தில் காட்ட வேண்டும்.

**காலில் இரத்தக்கட்டு அல்லது உணர்வில்லாமலிருந்தால்**

ஆவாரை இலையை அவித்து அரைத்து பிரச்சனை உள்ள கால் பகுதியில் கட்டு போட வேண்டும்.

**ஆமணக்கு இலை தின்று சொக்கல் ஏற்பட்டால்**

மோர் அரை லிட்டரில் உப்பு 50 கிராம் சேர்த்து உள்ளே தர வேண்டும்.

**இளங்கொடி விழாமலிருந்தால்**

மிஷ்டத்தழையை 1/2 கிலோ எடுத்து அவித்து தீவனமாகத் தர வேண்டும். அல்லது பெரிய வெங்காயம் 1/2 கிலோ எடுத்து வேக வைத்து உள்ளே தர வேண்டும்.

இசாக் மகமது நோட்
லக்கானா, கட்ச் மாவட்டம், குஜராத்

**நன்கு தீனி எடுக்க**

மிளகாய் வத்தல் 100 கிராம், சீரகம் 150 கிராம், டீத்தூள் 150 கிராம், ஓமம் 150 கிராம், வெல்லம் 1 1/2 கிலோ. இதனை 2 லிட்டர் நீர் சேர்த்து 1 லிட்டர் ஆக காய்ச்சி சுண்ட வைக்க வேண்டும். இதனை 3 வேளைக்கு பிரித்து தர வேண்டும்.

ஹாஜி குல்மகமது ஹாஜி சித்திக், ஏரண்டாவால்,
கட்ச் மாவட்டம்

**புண்ணிற்கு**

புண்மேல் தேன்விட்டு துணியால் சுற்றி கட்ட வேண்டும்.

**சளி, மற்றும் உடல் மெலிவுக்கு**

மோர் 500 மி.லி யில் மிளகாய் தூள் 100 கிராம் கலந்து வாய் வழியே உள்ளே தர வேண்டும்.

**மலச்சிக்கலுக்கு**

பலாச மர விதைகள் 2 எடுத்து அரைத்து நீரில் கலந்து உள்ளே தர வேண்டும்.

**காய்ச்சலுக்கு**

டீத்தூள், வெல்லம் சேர்ந்த கசாயம் 2–3 நாட்களுக்கு உள்ளே தர வேண்டும்.

**வயிறு உப்பிசத்திற்கு**

சோற்றுக்கற்றாழை 2–3 மடல்களுடன், கல்லுப்பு (இந்துப்பு) 25 கிராம், சாதாரண உப்பு 25 கிராம், மஞ்சள் 20 கிராம் சேர்த்து அரைத்து ஒரு நாளைக்கு 2 வேளையாக 3 நாட்கள் தர வேண்டும்.

### கோமாரி நோய்க்கு (FMD)

கடுகு எண்ணெய் 50 மி.லி வாயில் ஊற்ற வேண்டும். கால் பகுதியில் குளிர்ந்த நீரில் கல்லுப்பு கலந்து உள்ளே தர வேண்டும்.

**கழிச்சலுக்கு**

சாதாரண கழிச்சலுக்கு அரிசி 300 கிராம் எடுத்து இதில் சாதம் வைத்து தீனியாகத் தர வேண்டும். இதனை 2 நாட்களுக்கு கொடுக்க வேண்டும்.

**மண்ணுடன் தீனி எடுத்து விட்டால்**

பழைய வெல்லம் 1/4 கிலோ, தேன் 200 மி.லி பேரீச்சம்பழம் 250 கிராம் சேர்த்து வாய்வழியாக உள்ளே தர வேண்டும்.

**லக்கரா ஊரில் பின்பற்றப்படும் வைத்யம் :**



மிசிரிபாய் என்ற வைத்தியர் எருமைகள் காம்பு கெட்டியாக இருந்து பால் கறப்பது கஷ்டமாக இருந்தால் வெள்ளை பூண்டு ஒரு கிலோ, வெல்லம் ஒரு கிலோ, சேர்த்து அரைத்து இதனை 8 பாகமாக பிரித்து 8 வேளைகளில் 4 நாட்களாக கொடுக்க வேண்டும் என்று கூறுகிறார்.

**தானேதத்தர் ஊரில் பின்பற்றப்படும் வைத்யம்:**

1. வாய்காணை கால்காணை (கோமாரி) நோய்க்கு கடுகு எண்ணெய் 50 மி.லி வாயில் ஊற்றி சில நிமிடங்கள் வைத்து கழுவி விடுகின்றனர். இதனை ஒரு நாளைக்கு 2 தடவை செய்ய வேண்டும். கால் பகுதியில் குளிர்ந்த நீரில் உப்பு சேர்த்து கழுவி விடுகின்றனர்.

2. எருமைக்கன்றுகளில் வரும் வெள்ளை நிறக் கழிச்சலுக்கு மோரில் உப்பும் வெல்லமும் கலந்து 7 நாட்கள் கொடுக்க வேண்டும்.

**தென்னைக்கு உரம்**

தென்னைமரம் ஒன்றுக்கு கனஜீவாமிருதம் 3 கிலோ, பசு மாட்டு கோமியம் 300 மி.லி, மண்புழு உரம் 20 கிலோவை வருடத்திற்கு ஒரு முறை இட வேண்டும்.

## பட்ரோலியில் பின்பற்றப்படும் உத்திகள்

குஜராத் மாநிலத்தில் சூரத் அருகே பட்ரோலி கிராமத்தில் சுருச்சி சிக்ஸான் வசத் டிரஸ்ட் தொண்டு நிறுவனம் உள்ளது. இந்த நிறுவனத்தில் விவசாயிகளுக்கு தேவைப்படும் கையால் இயக்கப்படும் கருவிகளை உற்பத்தி செய்து விநியோகித்து வருகின்றனர். இந்த பண்ணையில் இயற்கை விவசாயம் கடைபிடிக்கப்படுகின்றது. இங்கு கடைபிடிக்கப்படும் அல்லது விநியோகிக்கப்படும் சில கருவிகள் பின்வருமாறு:

**காய்கறி செடிகளுக்கு இயற்கை விவசாயம்**



ஒவ்வொரு முட்டைக்கோசு செடிக்கும் 1/2 கிலோ மண்புழு உரம் இட வேண்டும். முட்டைக்கோசில் தோன்றும் புழுவைக் கட்டுப்படுத்த வெள்ளைப்பூண்டு 1 கிலோ, மிளகாய் 1 கிலோ இவைகளை அரைத்து ஒரு லிட்டர் மண்ணெண்ணையில் ஓர் இரவு ஊற வைத்து வடி கட்ட வேண்டும். வடிகட்டிய கரைசல் 100 மி.லியை 8 லிட்டர் நீரில் கலந்து பயிருக்கு தெளிக்க வேண்டும்.

**கையால் இயக்கப்படும் களை எடுப்பான்**



இந்த களை எடுக்கும் கருவியை வைத்து பயிரின் இரு வரிசைகளுக்கு நடுவில் களை எடுக்கலாம். இதில் நான்கு வகையான இணைப்புகளை தேவையான போது இணைத்து கொள்ளலாம்.
தட்டையான பிளேடு, V வடிவ பிளேடு, மண் அணைப்பான், கொழு.

**விதைபோடும் கருவி**



விதை விதைக்கும் சமயம் பெண்கள் குனிந்து செய்யும் வேலை பளுவை நீக்குகிறது. இதற்கு குறைந்தது 2 நபர்கள் தேவை.

**மண் பரசும் அல்லது தட்டை / இலை சேகரிக்கும் கருவி**



இதனை பயன்படுத்தி நின்று கொண்டே காய்ந்த இலை/தழைகளை சேகரிக்கலாம். மண் படுக்கையை சமமாக்கலாம். குப்பையை பரசலாம்.

**மண்புழு கழுவிய நீர்** (வெர்மி வாஷ்)
ஒரு லிட்டர் வெர்மிவாஷை 18 லிட்டர் நீரில் கலந்து வாரம் ஒரு முறை தெளிக்க வேண்டும்.

ராமாபாய்
பட்ரோலி, சூரத் மாவட்டம்
குஜராத், செல் : 9377774764

**பாம்பு பிடிக்கும் கருவி**





குஜராத்தில் ஜுனாகாத் மாநிலத்தில் காசோடு கிராமத்தில் மன்சுக் பாய் (வயது 62) ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இவர் இதுவரை 2000 பாம்புகளை உயிருடன் பிடித்து ஒரு தகரப் பெட்டியில் போகச் செய்து ஊருக்கு வெளியே விட்டு விடுகிறார். இந்த கருவியை இவர் 20 ஆண்டுகளுக்கு முன் கிர் என்ற வனப்பகுதிக்கு சென்ற சமயம் இந்த யோசனை வந்து உருவாக்கியுள்ளார். இவரை பின்பற்றி இவரது மகன், மருமகள் இவர்களும் பாம்பு பிடிப்பதில் நிபுணத்துவம் பெற்று விட்டனர்.

மன்சுக் பாய்
காசோடு, ஜுனாகட் மாவட்டம்
குஜராத், செல் : 9723975455

## மாடு தூக்கும் இயந்திரம்



நாமக்கல் மாவட்டத்தில் திருச்செங்கோடு ரோட்டில் திரு. ராஜசேகர் (42) கடந்த 20 ஆண்டுகளாக ஆட்டுப் பண்ணை நடத்தி வருகிறார். இவர் முதுநிலை கால்நடை பட்டதாரி படித்து விட்டு ஆட்டு பண்ணையை நடத்தி வருகிறார். இவருக்கு திருமணம் ஆகி ஒரு ஆண், ஒரு பெண் உள்ளனர். இவர் மாடு தூக்கும் இயந்திரம் ஒன்றை உருவாக்கியுள்ளார். இதன்விலை ரூ. 33,000. இந்த இயந்திரத்தை அருகில் உள்ள ஊர்களுக்கு அதாவது 50 கி.மீ. தூரத்திலிருந்து வருபவர்களுக்கு வாடகை ரூ. 250 ஒரு நாளைக்கு என்று கொடுக்கிறார். வெளியூரிலிருந்து வருபவர்களுக்கு இயந்திரத்தை கொண்டு செல்லும் செலவு திரும்ப எடுத்து வரும் செலவு அதிகமாக இருப்பதால் செலவு செய்த விலைக்கே விற்பனை செய்கிறார். மாடு தூக்கும் இயந்திரத்தை ஹைதராபாத், பெங்களூர், உடுமலைபேட்டை, மதுரை, தூத்துக்குடி, தேனி, நாமக்கல் ஆகிய ஊர்களுக்கு மொத்தம் 8 இயந்திரங்கள் வரை விற்பனை செய்துள்ளார்.

இந்த இயந்திரம் கிடைக்கும் இடம்:
ராஜசேகர், ஐடியல் ஆட்டுப்பண்ணை
திருச்செங்கோடு ரோடு, நாமக்கல் மாவட்டம்
செல் : 9487540014, 9597477014

## சிறுமுகை காரப்பனின் நிஜமாகும் நெசவு கனவு



கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையம் அருகே சிறுமுகை என்ற ஊர் இன்று இந்தியாவிலே 3 வது பட்டு சேலை விற்பனை நகரமாக விளங்குகிறது. கடந்த 30 வருடங்களாக பட்டு சேலை உற்பத்தி கூடி இவ்வூர் மற்றும் சுற்று கிராம கைத்தறி நெசவாளர்கள் நல்ல வருமானம் ஈட்டி வருகின்றனர். இந்த நிலைமைக்கு காரணகர்த்தா திரு. காரப்பனின் தனிமனித முயற்சி என்றால் அது மிகையாகாது. காரப்பனுக்கு வயது 71 ஆகிறது. இவர் ஆரம்பப்பள்ளிக்கூடம் கூட செல்லாதவர். இவர் நெசவாளர் குடும்பத்தில் பிறக்காதவரானாலும் 12 வயதிலிருந்து நெசவில் ஈடுபட்டு இன்று நெசவுத் தொழில் நலிவடைந்து விடாமல் உயிர்ப்பித்துள்ளார். முன்பு இப்பகுதியில் பல நெசவாளர் குடும்பங்கள் பருத்தி நூல் சேலையைத்தான் நெய்துவந்தனர். காரப்பன் பெங்களூரில் சில வருடங்கள் நெசவாளர்களுடன் நெருங்கிப் பழகியதால் பட்டு சேலை உற்பத்தி செய்வதே நெசவாளர்களுக்கு நல்ல பலனைத் தரும் என்று எண்ணி காரியத்தில் ஆயத்தமானார். இதன் விளைவு பருத்தி சேலைக்கு பதில் பட்டு சேலைக்கு நெசவாளர்கள் மாறினார்கள்.

நல்ல வருமானம் கிடைத்துவந்ததால் இத்தொழில் இன்று இப்பகுதியில் வெற்றி நடைபோட்டு வருகிறது. சிறுமுகையைச்சுற்றியுள்ள 45 கிராமங்களில் சுமார் 20,000 நெசவாளர்கள் உள்ளனர். இவர்களுக்கு பட்டுநூல் விநியோகித்து முன்பணம் தர மாஸ்டர்வீவர்ஸ் எனப்படும் விநியோகஸ்தர்கள் 1000 நபர்கள் உள்ளனர். நெசவுத் தொழிலாளர்களுக்கு ஒரு பாவில் 2–3 சேலைகள் நெய்தால் சுமார் ரூ. 1000 முதல் ரூ. 2000 வரை 3 நாட்களில் சம்பாதிக்கலாம். மாதம் ஒரு நெசவாளி ரூ. 20,000 லிருந்து ரூ. 25,000 எளிதில் சம்பாதிக்கின்றனர். பட்டு சேலைகள் வாங்க பல மாநிலங்களிலிருந்தும் ஆர்டர் வருகிறது. பல மாவட்டங்களிலிருந்தும் வாடிக்கையாளர்கள் இங்கு வந்து திருமண வைபவகங்களுக்கு பட்டுச் சேலை எடுத்து செல்கின்றனர்.

**புதிய கண்டுபிடிப்புகள் அறிமுகமாதல்**

ஆட்டோமெட்டிக் கோர்வைத் தறி, ஜக்காட் தூக்கும் இயந்திரம் (மின்சாரத்தில் இயங்கும்) போன்ற நவீனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. காரப்பனும் தற்சமயம் உடல் ஊன முற்றோர் குறிப்பாக கைகளை பயன்படுத்தி இழுவைத்தறியை இயக்காமலேயே காலால் தறியை முடிக்கும் நிலையிலுள்ளார். பாவு சுற்றும் இயந்திரம் கண்டுபிடித்துள்ளார். இதனால் நெசவுத் தொழிலில் நேரமும் குறைந்து வேலைப்பாடு பளுவும் குறைந்துள்ளது. சிறுமுகையில் இன்று 75 சில்க் சேலை கடைகள் உள்ளன. இதில் 1500 பெண்கள் மாதம் ரூ. 6000–7000 வரை பணம் ஈட்டுகின்றனர். குடும்ப சகிதமாக வீட்டிலிருந்து கொண்டே ஆரோக்யமாக வாழ்ந்து கொண்டு மாதம் ரூ. 20,000 வருமானம் எடுக்க முடிகின்றது எனில் இதுவே நெசவின் பெருமை. காரப்பனின் கனவு நனவானது. இதே போன்று இன்று நலிவடைந்த நெசவுத் தொழிலை திரும்பிப்பார்க்காது ஓட்டம் பிடிக்கும் பிற பகுதி நெசவாளர்களால் பின்பற்றபடுமானால் அதுவே உண்மையான கிராம முன்னேற்றம். நாட்டின் முன்னேற்றம். நெசவாளர்களின் பிள்ளைகள் மோகம் கொண்டு நெசவுத் தொழிலை விட்டு ஐ.டி. பீல்டு, டாக்டர், இன்ஜினியர் என பிற துறைகளிலே ஆர்வம் காட்டுகின்றனர். எனவே நெசவுத் தொழிலை பள்ளிப் பருவத்தில் பழகி பின்னால் நல்ல வேலை கிடைக்காவிட்டால் கிராமத்திற்கு திரும்ப வந்து நெசவு மூலம் தன்மானம் காத்து வருமானம் ஈட்டி குடும்பத்திற்கும், ஊருக்கும் பெருமை சேர்க்கலாம். இதற்கு காரப்பன் கூறும் உத்திகளை கடைபிடித்து அரசு ஆதரவுடன் நெசவு மீண்டும் புத்துயிர் பெற அல்லது பட்டமரம் தளிர்த்திட புதிய மாற்றங்களை புகுத்தலாம். காரப்பன் நெசவு சம்பந்தப்பட்ட கருத்தரங்குகள், கண்காட்சிகளில் கலந்து கொள்பவர்களில் முக்கியமானவர்களுக்கு சிறப்புப் பரிசாக இராட்டையுடன் கூடிய நெசவுத்தறியை (சிறு மாடல்) அன்பளிப்பாக கொடுத்து வருகிறார் (படம் பார்க்க).

காரப்பனின் மனைவி, 2 குமாரர்கள், மருமகள்களும் அனைவரும் நெசவிலும் பட்டு சேலை விநியோகிப்பதில் ஈடுபட்டு கூட்டு குடும்பமாக வாழ்ந்து வருகின்றனர்.

திரு. காரப்பன், 32 சி, சில்க்பஜார் சிறுமுகை – 641302
கோவை மாவட்டம். செல் : 9842222885

**வேகத்தடையை முன் கூட்டியே காட்டும் தகவல் படம் (சிக்னல்)**



தினந்தோறும் வாகன ஓட்டிகள் வேகத்தடையை பகலிலும் இரவிலும் கடந்து செல்லும் பொழுது அதிக சிரமம் ஏற்படுகிறது.

காரணம் :

வேகத்தடையின் மீது வெள்ளை கோடுகள் சரிவர தெரியாததாலும் சில இடங்களில் வெள்ளை கோடுகள் இல்லை என்றதாலும் பகல் நேரங்களில் மரங்கள் சூழ்ந்த இடங்களில் மரத்தின் நிழல் வேகத்தடையின் மீது பட்டு வேகத்தடை சரிவர தெரியாமல் போகிறது.

இரு சக்கர வாகனம் மற்றும் அனைத்து வாகன ஓட்டிகளும் வேகத்தடை அருகில் வந்து ப்ரேக் போடுவதன் மூலம் சிலர் கீழே விழுந்தும் சிலருக்கு கை, கால் அடிபட்டு எலும்பு முறிந்து உடைந்து உயிரையும் இழக்க நேரிடுகிறது. வாகனமும் பழுது ஏற்படுகிறது.

சாலை விதிமுறைகளின் போதிய விழிப்புணர்வு ஒரு சில இடங்களில் இல்லாததாலும் மேலும் புதிய உத்திகளை கொண்டு தினந்தோறும் சாலை போக்குவரத்துத்துறை தன் சேவையை செய்து கொண்டே வருகிறது. அந்த வகையில் நான் கண்டுபிடித்த ஒரு புதிய படைப்பு அனைத்து சாலைகளில் உள்ள வேகத்தடைகளில் ஏற்படும் விபத்துக்களை முற்றிலும் தடுக்கும் வகையில் அமைந்துள்ளது.

வேகத்தடையை வாகனங்கள் கடக்கும் பொழுது அந்த வழியில் சாலையில் தொடர்ந்து ஓட்டுபவராக இருந்தால் மட்டுமே எந்த இடத்தில் வேகத்தடை உள்ளது என்று கவனமாக ஓட்டுவார். புதிதாக வரும் வாகன ஓட்டிக்கு அதிக சிரமத்தையும் விபத்தையும் சந்திக்க நேரிடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். புதிய வழிமுறையை பின்பற்றினால் இது போன்ற நிகழ்வினைத் தடுக்கமுடியும்.

சாலை போக்குவரத்து துறைக்கு தேவைப்பட்டால் எனது கண்டுபிடிப்பை வழங்குவதற்காக காத்திருக்கிறேன். எனக்கு முறையான காப்புரிமை அங்கீகாரம் கிடைக்க உதவி செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**சாலை போக்குவரத்துத் துறை**

எங்கள் ஊரில் கிராமத்துக்கு செல்லும் சாலைகளின் அகலம் 3.75 அளவு உள்ள நிறைய வேகத்தடைக்கு வெள்ளை கோடுகள் இல்லை. வேகத்தடை அருகில் எந்தவொரு தகவல் பலகையும் இல்லை. மேலும் தினந்தோறும் இரு சக்கர வாகன ஓட்டிகளுக்கு சரிவர வேகத்தடை தெரியாத காரணத்தினால் வேகத்தடை அருகில் வந்து ப்ரேக் போடுவதால் தட்டு தடுமாறி முட்டி மோதி கிழே விழுந்து விபத்திற்கு உள்ளாகின்றனர். இதனால் கர்ப்பிணி பெண்களுக்கு கருச்சிதைவு ஏற்பட்டுள்ளது. இந்த அளவிற்கு இந்த வேகத்தடையினால் பாதிப்புகள் உள்ளன. முதியோர்கள் பயணம் செய்யும் போது அதிக அளவில் பாதிக்கப்படுகின்றனர்.

இது போன்ற நிகழ்வினை தவிர்க்கும் வகையில் நான் சமூக நலன்கருதி எனது சேவை எங்கள் ஊரில் உள்ள வெள்ளை கோடு இல்லாத வேகத்தடை அனைத்திற்கும் சமூக சேவையாக வெள்ளைக்கோடு போடப் போகிறோம் என்று தெரியப்படுத்துகிறோம்.

வேகத்தடை மீது வெள்ளைக்கோடு போடும் பொழுது சிகப்பு கொடி வைத்து மிகப் பாதுகாப்பாக செயல்படுவோம். பொது மக்களுக்கு ஒரு நொடி பொழுது கூட பயணத்தை நிறுத்தவோ தடை செய்யவோ மாட்டோம் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த பணியானது பெயரும் புகழுக்காக அல்ல. நாட்டு சேவைக்காக ஒரு இடத்தில் இது போன்ற பணியை செயல்படுத்தினால் நாடு முழுவதும் என்னைப் போன்ற சமூக சேவை செய்பவர்கள் மூலம் நாடு முழுவதும் உள்ள மக்கள் நலம் பெறுவார்கள். என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அகலம் 3.75 அளவுள்ள சாலைகளில் வேகத்தடை ஒரே அளவில் இல்லாமல் பெரிதும் சிறிதும் நீளம் குறைந்த அளவில் உள்ளதாலும் அதிக விபத்துகளுக்கு காரணமாக உள்ளது.

இது சாலைப் போக்குவரத்துத்துறையில் உள்ள குறைபாடுகள் என்று சொல்ல முடியும். இது போன்ற குறைபாடுகளை தவிர்க்க வேகத்தடையின் அளவு நாடு முழுவதும் உள்ள கிராமத்து சாலைகளில் உயரம் 3, நீளம் குறைந்தது 6 அடியாவது இருக்க வேண்டும். வேகத்தடையின் அளவு என்பது பிரிட்டானியா மில்க் பிஸ்கட் பாக்கெட்டை பிரித்து பார்த்தால் பிஸ்கட் அனைத்தும் ஒரே மாதிரி அளவுகளில் இருக்கும். அதேபோல் வேகத்தடை என்பது நாடு முழுவதும் ஒரே மாதிரி அளவுகளில் இருந்தால் விபத்துக்களை முற்றிலும் தடுக்க முடியும்.

கிராமப்புற சாலைகளில் வேகத்தடையின் அளவு 3 அடி உயரம், 6 அடி நீளம் என்ற அளவை நாடு முழுவதும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். இரண்டு வழிச் சாலையில் வேகத்தடையின் அளவு 7.30 அளவுள்ள வேகத்தடையின் உயரம் 4 நீளம் 12 அடி வரை இருக்க வேண்டும்.

வேகத்தடையின் மீது எப்பொழுது வெள்ளைக்கோடு சரிவர தெரியாமல் போகிறதோ அப்போது உடனடியாக வெள்ளைக்கோடு போட வேண்டும். இது போன்ற செயல்பாட்டை உடனடியாக செய்வதன் மூலம் விபத்துகளை தவிர்க்க முடியும்.

கிராமங்களில் வேகத்தடை ஒரே மாதிரியான அளவுகளில் இல்லை. இது போன்ற அளவுகளில் இருந்தால் விபத்துகளே ஏற்படும். வேகத்தடையை நாங்கள் அளவு எடுத்த போது கீழ்க்கண்ட அளவுகளில் உள்ளன.

1. தொட்டியம் அரங்கூர் ரோடு – உயரம் 4'', நீளம் 45'',
2. தொட்டியம் கொசவம்பட்டி ரோடு – உயரம் 3 1/2'', நீளம் 50'',
3. தொட்டியம் பழைய சேலம் ரோடு – உயரம் 2 1/4'', நீளம் 39'',
4. தொட்டியம் பவளக்கடை வீதி உயரம் 2'', நீளம் 41'',
5. தொட்டியம் தாலுகா ஆபீஸ் எதிரில் உயரம் 23/4'', நீளம் 24'',
6. பாலசமுத்திரம் ரேசன்கடை அருகில் உயரம் 2'' , நீளம் 18'',
7. பாலசமுத்திரம் பள்ளி அருகில் உயரம் 3 1/2'', நீளம் 25''

M.சரவணன்
கதவு எண் : 7 வடக்குரத வீதி
தொட்டியம் – 621215, திருச்சி மாவட்டம்
செல் : 9047261565

## நூல் மதிப்புரை

**"மண் வளம் காக்கும் தீர்த்தங்கரரும், மண் வளம் காக்கும் விருட்சங்களும்".** ஆசிரியர் : பூ.இரத்தினசபாபதி. பக்கம் : 136, வெளியீடு : ஜெயின்ஸ் இந்தியா அறக்கட்டளை, சியாட் ஹவுஸ் 4வது மாடி, 961, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை–600 084. விலை : ரூ. 250.

இந்த நூலில் 24 தீர்த்தங்கரர்கள் பற்றிய குறிப்புகளும் அவர்கள் எந்த மரத்தின் கீழ் தவம் செய்தார்களோ போன்ற குறிப்புகள் தெளிவாகக் கொடுக்கப் பட்டுள்ளன. பொதுவாக அரச மரத்திற்கு அடியில் தவம் செய்து புத்தர் ஞானம் அடைந்தார் என்பதை கேள்விப்பட்டு இருக்கிறோம். ஆனால் நமது தேசத்தில் 24 தீர்த்தங்கரர்கள் பற்றி தவம் செய்த ஸ்தலங்கள் தெரிந்து கொள்ள இந்த நூல் உறுதுணையாக உள்ளது. இதில் குறிக்கப்பட்டுள்ள ஆயுள் பார்சுவ நாத சுவாமி, வர்த்தமான சுவாமி (மகாவீரர்) ஆகியோர்களுக்கும் மட்டும் ஆயுள் 100 வருடங்களுக்குள் இருப்பது தெரிகிறது. பிற தீர்த்தங்கரர்களுக்கு பல லட்சக்கணக்கான வருடங்கள் ஆயுள் இருப்பது வியப்பு அளிக்கிறது.

இந்த நூலில் ஸ்தல விருட்சங்கள் பற்றிய குறிப்புகள் விவரமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த நூலில் சில குறிப்புகள் தெளிவுப்படுத்தப்பட்டால் நல்லது.

1) பக்கம் : 43 அர்ச்சுனேஷ்வரர் கோவிலில் கிடைத்த கல்வெட்டு எந்த வருடம் என குறிப்பிட்டால் நன்றாக இருக்கும்.

2) பக்கம் : 43 உத்திரகோஷமங்கை என்ற ஊரில் உள்ள கோவிலில் உள்ள மரத்தின் பெயர் குறிப்பிடவில்லை .

3) பக்கம்: 46 அசோக மரத்தின் பட்டை பெண்களின் கர்ப்பப்பை சம்மந்தமான நோய்களுக்கு பயன்படுத்தப்படுகிறது என்ற பயன்பாடு சேர்த்திருக்கலாம்.

4) பக்கம் : 67 காரைமரத்தின் பட்டை, வேர் மாட்டு கழிச்சலுக்கு பயன்படுத்தப்படுகிறது. இது குறிப்பிடப்படவில்லை.

5) பக்கம் : 69 கிலுவை மரம் கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுகின்றது என்ற குறிப்பு இதில் இல்லை.

6) பக்கம் : 80 தர்ப்பை புல்லின் கிரஹன நாட்களில் பயன்பாடை பற்றி கூறியிருக்கலாம்.

7) பக்கம் : 91 நெல்லி மரம் இது விஷ்ணுவின் மரம். இதற்கு விளக்கேற்றி வைத்து வணங்கும் முறை கூறப்படவில்லை.

கார்த்திகை மாதம் சுக்லபட்சம் (தேய்பிறை) நவமியில் நெல்லி மரத்திற்கு ஊதுபத்தி பொருத்தி, துளசி நீர் வைத்து வணங்குவதால் பெருமாள் (விஷ்ணு) அருள் கிடைப்பதாகக் கூறுகின்றனர். இதே போல் மாசி பௌர்ணமிக்கு முந்திய ஏகாதசியில் (நெல்லி ஏகாதசி) விரதமிருந்து நெல்லி மரத்தை வணங்குவது விசேஷம் என்று கூறுகின்றனர். லட்சுமிதேவி, பிரம்மா, பார்வதி தேவி இவர்கள் இறைவனை நினைத்து விட்ட கண்ணீர் நெல்லி மரமாக வளர்ந்ததாகக் கருதுகின்றனர். நெல்லியை ஞாயிறு மற்றும் இரவு வேளை தவிர மற்ற நாட்களில் உண்பது உகந்தது என கூறப்படுகிறது. இப்பேற்பட்ட மகத்துவம் வாய்ந்த நெல்லியை வளர்ப்போருக்கும் நல்ல பலன் உண்டு என்றால் அது மிகையாகாது. இதை அடுத்த பதிப்பில் சேர்க்கலாம்.

## டிராக்டரில் இணைக்கப்பட்ட டில்லர்



மஹராஜ் சிங் லோதி டிராக்டரில் இணைக்கும் டில்லர் மூலம் உழவு மற்றும் விதைத்தபின் களையெடுப்பு, மண்ணை கிளறி விடுதல் போன்ற பின் செய் நேர்த்தி வேலைகளை எளிதில் செய்து முடிக்கிறார். இதனால் வேலைப்பளு மற்றும் டிராக்டர் எரிபொருள் செலவு குறையும். முதல் உழவு செய்வதற்கு மாற்றம் செய்யப்பட்ட கொழுவும் அடுத்த பின் செய் வேலைகளுக்கு ஆழமாகச் செல்லும் கொழுவும் இணைக்கப்பட்டுள்ளன.

இந்த அமைப்புடைய டில்லர் டிராக்டருடன் பி.டி.ஒ. சாப்ட் மூலம் இணைக்கப்படுகிறது. இதன் விலை ரூ. 50,000/– மட்டுமே. இந்த கொழுக்கள் ஒவ்வொன்றும் இணைந்து செயல்படுகிறதால் 1.25 ஏக்கர் 3 லிட்டர் டீசலே போதுமானது. பழைய டிங்க கலப்பை கடினமான மண்கண்டம் உள்ள பகுதியில் நன்கு ஆழமாக போவதில்லை இதற்கு டிங்க் கலப்பைக்கு கார்பன் ஸ்டீல் கலனை பயன்படுத்தி செய்யப்படுவதால் இதன் செயல் திறன் கூடுகிறது. ஆழமாகவும் களைகளை அகற்றி புதைக்கவும் முடிகிறது. மண்ணிற்கு மேல் மட்டத்தில் மருது தன்மையும் தர முடிகிறது.

மஹராஜ் 32 வயதாகிறது. இவர் 10 வது வகுப்பு வரை சென்று நின்று விட்டார். இவர் ஆழ்குழாய் கிணறு பம்ப் செட்டில் மாற்றங்கள் செய்து தரத்தை கூட்டியுள்ளார். இவருக்கு 2019 ம் வருடத்தில் தேசிய கண்டுபிடிப்பாளர் அறக்கட்டளை சார்பாக விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## வாசகர் வட்டம்

### மூட்டு வலிக்கு

எனக்கு பல நாட்கள் மூட்டுவலி இருந்து வந்தது. இதற்கு வேப்பம் பட்டை சுமார் 1 கிலோ எடுத்து சீரகம் 100 கிராம் சேர்த்து காய்ச்சி கொதிக்கவிட வேண்டும். இதனை இரவில் தயார் செய்து பின் ஆற வைக்க வேண்டும். இந்த கசாயத்தை வடிகட்டி காலை வெறும் வயிற்றில் 100 மி.லி. அளவு அருந்தி வர வேண்டும். மீண்டும் 100 மி.லி. நீர் ஊற்றி பின் கொதிக்க வைத்து இதே முறையில் காலை 100 மி.லி. அளவு அருந்த வேண்டும். இதை செங்கம் வைத்யர் திரு. சுப்பரமணி கூறி 48 நாட்கள் கடைபிடித்து வர எனக்கு முற்றிலும் குணமானது.

காசிநாதன்,
பக்கிரிப்பாளையம், பழனி.
செல் : 8124219957

### சிறு நீரகக்கல்லுக்கு

மூக்கிரட்டை, நாயுருவி, கூழைப்பூ, மாவிலங்கம் பட்டை, சமூலம் எடுத்து 150 கிராம் தூளுடன் 2 லிட்டர் நீர் சேர்த்து 1/2 லிட்டராக சுண்ட வைக்க வேண்டும். இதனை 3 வேளை பிரித்து சாப்பிட வேண்டும். இதனை 10 நாட்கள் அருந்தி வர சிறுநீரகக்கல், பித்தப்பை கல் அனைத்தும் கரைந்துவிடும்.

சுப்ரமணி
பாண்டியநகர், செங்கம்,
திருவண்ணாமலை மாவட்டம்
செல் : 7639432774

### தேனீ வளர்ப்பு பயிற்சி மையம்

நாங்கள் பல ஆண்டுகளாக தேன் பெட்டிகள் வைத்து தேன் எடுத்து வருகிறோம். இராணி தேனீக்களை தனியே ஒரு கூண்டு வைத்து அதில் ராயல் ஜெல்லி உணவைத் தருகிறோம். பொதுவாக தேனீக்கள் 60 சதவீதம் மதுரம் (சேமிக்கப்படும் தேன் மதுரமாகி விடுகிறது 40 சதவீதம் மகரந்தம் பின் நீர் கலந்து (தேன் ரொட்டி) உணவாக எடுத்துக் கொள்ளும். ஒரு கிலோ ராயல் ஜெல்லி ரூ. 2,75,000 விலையில் கிடைக்கிறது. நாங்கள் தேவைப்படுவோர்க்கு சுத்தமான தேன் ரூ. 1000/– ஒரு கிலோவிற்கு கொடுக்கிறோம். தேனீ வளர்ப்பு பயிற்சி 10 நாட்களுக்கு கொடுக்கிறோம். கலந்து கொள்பவர்கள் நித்தம் ரூ. 600/– பயிற்சி கட்டணம் செலுத்த வேண்டும்.

M. கணேஷ்குமார், எண் : 36, டி.எஸ்.பி. நகர்
3 வது தெரு, மதுரை – 625 016
செல் : 9443475132, 9894871193

அன்றாட வாழ்வில் பயன்படும் மூலிகை தயாரிப்புகள் பற்றி நம் வழி வேளாண்மை பருவம் –30 இதழ் – 2 ல் பிரசுரித்திருந்தீர்கள். என்னிடம் கீழ்க்கண்ட புத்தகங்கள் உள்ளன. தேவையானோர் பெற்றுக் கொள்ளலாம்.

1. மக்களறிந்த மூலிகை வைத்யம் –ஆங்கிலம் (ரூ. 100),நலம் தரும் மூலிகைகள்(ரூ.50), இரு துருவங்களும் இடைப்பட்ட உண்மைகளும் (ரூ. 50), வெள்ளை பூதங்கள்(ரூ. 50), பெண்ணுக்குப் பெண் மருத்துவக் கல்வி (ரூ. 50), மூலிகைகளினால் பயிர் பாதுகாப்பு (ரூ. 60), இயற்கை வேளாண்மைக்கு வழி காட்டி (ரூ.50), நலமுடன் வாழ்க (ரூ. 100), சிறுவர் கதைகள், கட்டுரைகள் (ரூ. 100), சிறு கதைகள் (பெரியவர்களுக்கு) (ரூ. 100), என் காலடித்தடங்கள் (ரூ. 100), என் காலடித்தடங்கள் (ரூ. 100) வணங்கத்தக்க தாவரங்கள்(ரூ. 100) Live well (ரூ. 100), Life giving medicinal plants (ரூ. 100).

ஆன் விக்டோரியா
எண். 27, அய்யனார் நகர், புதுக்கோட்டை.
செல் : 63743 16989

### மேய்ச்சல் நில பாதுகாப்பு பாதயாத்திரை

குஜராத் மாநிலம் கட்ச் பகுதியில் சுமார் 2500 சதுர கிலோ மீட்டரில் பன்னி எனப்படும் மேய்ச்சல் நிலம் உள்ளது. இப்பகுதியிலுள்ள 54 கிராமங்களில் ஆடு, மாடு வளர்ப்போர் இதைப்பயன்படுத்தி வருகின்றனர். மேய்ச்சல் நிலம் வனப்பகுதியாக கூறப்படுகிறது. இப்பகுதியில் கால்நடை வளர்ப்பிற்கு மேய்ச்சல் நிலம் ஆதாரமாக உள்ளது. இதில் சீமைக்கருவேல் பரவி விட்டதால் 40 சத பகுதியில் புல்வெளி பாதிப்புக்குள்ளாகி விட்டது.

சீமைக்கருவேல் அகற்றக் கோரியும் தங்கு தடையில்லா மேய்ச்சலுக்கு அனுமதி கோரியும் மால்தாரி என்ற (சிந்து முஸ்லிம்) கிடைக்காரர்கள் ஒரு

பாதயாத்திரையை ஜனவரி 9–12 வரை ஏற்பாடு செய்தனர். இதில் மதுரை சேவா சார்பாக திரு விவேகானந்தன் கலந்து கொண்டனர்.

தற்சமயம் ஐ.நா.சபை 2026 ஐ உலக மேய்ச்சல் நிலம் மற்றும் கிடைக்காரர்கள் ஆண்டாக அறிவிக்க கோரி ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. இந்த ஏற்பாட்டை மங்கோலியா நாடு தீர்மானமாகக் கொண்டு வந்தது. இது வரை 15 உலக நாடுகளும் சேவா உள்பட 160 நிறுவனங்களும் ஆதரவு தெரிவித்துள்ளன. இந்த தீர்மானத்திற்கு கட்ச் வட்டார கிடைக்காரர் சங்கமும் ஆதரவு தெரிவித்து யாத்திரை கூட்டத்தில் பேசினர்.

“பசுமை பன்னி (மேய்ச்சல் நிலம்) எங்கள் பன்னி” போன்ற கோசங்கள் எழுப்பப்பட்டன.

## செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு மருந்து

இயற்கை முறையில் மூலிகை தாவரங்களை அரைத்து சாறு எடுத்து கொடுப்பது சற்று கடினமான வேலையாக உள்ளது. இதற்கு பதில் வேப்பெண்ணை அல்லது புங்கை எண்ணெய் 1 லிட்டர் எடுத்து வெள்ளைப்பூண்டு 100 கிராம் (அரைத்தது) சேர்த்து காய்ச்ச வேண்டும். நன்கு காய்ச்சி வடிகட்டி வைத்து கொள்ளலாம். இதனை ஆடுகளுக்கு 20 மி.லி வீதம் மாதம் ஒரு முறை அல்லது 2 – 3 மாதங்களுக்கு ஒரு முறை அல்லது மழை காலத்தில் குடற்புழு நீக்க மருந்தாக கொடுக்கலாம்.

இம்மருந்தை தூத்துக்குடி மாவட்டம் வெம்பூர் கிராமத்தில் திரு. ரவியின் 60 செம்மறி ஆடுகளுக்கு கொடுத்து பார்த்ததில் கழிச்சல் நின்று நன்கு தீவனம் எடுத்தது. சாதரணமாக ஆங்கில மருந்தான அல்பண்டசோல் கொடுக்கும் சமயம் ஆடு முதல் 2 நாட்களில் கிரங்கி விடும். பின்னர் தான் தெளிவு ஏற்படும். ஆனால் நாட்டு மருந்து கொடுக்கம் சமயம் இந்த கிரக்கம் ஆடுகளுக்கு இருக்காது என்ற ரவி கூறுகிறார்.

ரவி, வெம்பூர், பந்தல்குடி வழி

தூத்துக்குடி மாவட்டம். செல் : 9626672459

## பழைய ரூபாய் நோட்டுகளை புதுப்பித்தல்



குஜராத் மாநிலம் ஜுனாகத் மாவட்டம், கேசோடு நகரத்தில் திரு. கிசோர் பாய் வெற்றிலை பாக்கு வியாபாரம் செய்து வந்தார். தற்பொழுது 60 வயது கடந்து விட்டார். தன்னுடைய வியாபாரத்தை நிறுத்தி விட்டார். தொழில் நின்ற பின் மக்களுக்கு நல்ல சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் பழைய அல்லது கிழிந்த ரூபாய் நோட்டுக்களை மாற்றி புதிய நோட்டுக்களை கொடுத்து வருகிறார். இவர் பாக்கெட்டில் நல்ல ரூபாய் நோட்டுக்கள் கத்தையாக வைத்திருப்பார். இவரை பார்ப்பவர்கள் தங்களிடமுள்ள பழைய அல்லது கிழிந்த நோட்டுக்களை கொடுத்து உடனுக்குடன் நல்ல நோட்டுக்களை பெற்று கொள்வார்கள். இவரை பற்றி சுற்றுக்கிராமங்களில் உள்ளோர் தெரிந்து வைத்துள்ளனர். இவர் மக்களிடமிருந்து பெற்ற பழைய நோட்டுக்களை வங்கிக்கு சென்று நல்ல நோட்டுக்களாக மாற்றி கொள்வார். இவர் வாரத்தில் ஒரு முறை வங்கிக்கு சென்று மாற்றி கொள்வார். இவருக்கு வங்கியில் கியூ வரிசையில் நின்று செல்ல வேண்டிய அவசியமில்லை. ரிசர்வ் வங்கி கூறியபடி பழைய நோட்டுக்களை நல்ல நோட்டுக்களாக மாற்றும் வங்கியின் பணியை ஒரு தனி நபர் எந்த லாபமுமின்றி செய்து வருகிறார். கடந்த 6 வருடங்களில் ரூ. 80 லட்சம் மதிப்புள்ள நோட்டுக்களை மாற்றியுள்ளார். இவர் இந்த மாற்றுதலுக்கு எந்த ஒரு கமிஷனும் எடுத்து கொள்ளுவதில்லை.

## சர்க்கரை நோய்க்கு

நாங்கள் தானம் கருணை இல்லத்தில் நாட்டு பசு மாடுகள் பராமரித்து வருகிறோம். எங்கள் ஊரில் 2 நபர்களுக்கு சர்க்கரை நோய் இருந்தது. அவர்களுக்கு 3 நாட்கள் தொடர்ந்து பசு மாட்டு கோமியம் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர சர்க்கரை சத்து அளவு கணிசமாக குறைந்து விட்டது.

சரவணன், கருணைதான் பள்ளி,

நிலக்கோட்டை செல்: 9840309521

**மடி நோய்க்கு மருந்து**



4 எலுமிச்சம் பழங்களை பிழிந்து சாறு எடுத்து தேங்காய் பாலில் சேர்த்து ஒரு நாளைக்கு மும்முறை தடவ வேண்டும். மாட்டிற்கு வாய் வழியாக சாராநத்தி, ஆடாதொடை இலைகளை கைப்பிடியளவு அரைத்து உள்ளே தர வேண்டும். ஆரம்பத்தில் பால் மஞ்சளாக இருக்கும். குணமாகவும் வெள்ளை நிறத்தில் மாறி விடும் மூன்றாவது நாள் சோற்றுக்கற்றாழை மடல் அரைத்து தடவ வேண்டும். இதன் பின்னர் ஊற வைத்த வெந்தயத்தை அரைத்து பசையாக தடவ வேண்டும். இது போன்று 5–7 நாட்கள் கடைபிடித்து வந்தால் மடிநோய் குணமாகும்.

பி.எஸ். ராஜன்

பொட்டபுரம், கொல்லம், கேரளா

தேனீ : 303407 : ஜூலை – டிசம்பர் – 2019

## பள்ளி ஆசிரியருக்கு ரூ. 7.50 கோடி பரிசு

மஹாராஷ்டிரா மாநிலத்தில் சோலாப்பூர் மாவட்டம், பரித்தேவாடி கிராமத்தில் ஆரம்ப பள்ளி ஆசிரியராக திரு.ரஞ்சித்சின்ஹா திசேல் (32 வயது) பணியாற்றி வருகிறார். இவர் சர்வதேச அளவில் சிறந்த ஆசிரியராக தேர்வாகி ரூ. 7.50 கோடி ரூபாய் பரிசு தொகை பெற்றுள்ளார் என்ற அறிவிப்பு 3.12.2020 வெளியானது.

ஐரோப்பிய நாடான, பிரிட்டன் தலைநகர் லண்டனைச் சேர்ந்த வர்க்கி அறக்கட்டளை என்ற அமைப்பு, சர்வதேச அளவில், கல்விப் பணியில் சிறப்பான சேவை செய்து வரும் ஆசிரியரை தேர்ந்தெடுத்து, ஆண்டுதோறும் கவுரவித்து வருகிறது. இந்த அறக்கட்டளையை, இந்தியாவை சேர்ந்த கல்வியாளரும், சமூக சேவருமான சன்னி வர்க்கி என்பவர் 2014 ல் லண்டனில் நிறுவினார். இதற்கு யுனெஸ்கோ எனப்படும். ஐ.நா. கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பு தொடர்புடன் இணைந்து சிறந்த ஆசிரியர் விருது அளித்து வருகிறது.



சர்வதேச அளவில் நடப்பு ஆண்டுக்கான சிறந்த ஆசிரியர் விருதுக்கு 140 நாடுகளைச் சேர்ந்த 12,000 ஆசிரியர்கள் விண்ணப்பித்தனர். இதிலிருந்து 10 ஆசிரியர்கள், இறுதி சுற்றுக்கு தேர்வாகினர். அதில் திரு. ரஞ்சித்சின்ஹா திசேல் இந்த ஆண்டுக்கான சிறந்த ஆசிரியராக தேர்வானார். இவருக்கு ரூ. 7.50 கோடி பரிசு தொகை கிடைப்பதாக அறிவிக்கப்பட்டது. இந்த பரிசு தொகையில் பாதி பணத்தை, இறுதி சுற்றுக்கு தேர்வான மீதமுள்ள ஒன்பது ஆசிரியர்களின் கல்வி பணிக்காக பகிர்ந்தளிக்க போவதாக ரஞ்சித் அறிவித்தார்.

2006 ஆம் ஆண்டு பொறியியல் கல்லூரியில் சேர்ந்து இன்ஜினியர் படிப்பு படித்துக் கொண்டிருந்தார் திசாலே. படிப்பில் நம்பிக்கை இழந்து படிப்பை நிறுத்தி விட்டார். இவருடைய தந்தையின் யோசனைப்படி கல்வி தொடர்பான டிப்ளமோ ஒன்றுக்கு விண்ணப்பித்து பயிற்சி முடித்ததும் ஆசிரியராக தேர்வு செய்யப்பட்டார்.

சோலாப்பூர் மாவட்டத்தில் பரித்வாடி கிராமத்தில் மாட்டு கொட்டகையுடன் சேர்ந்தாற்போல் பாழடைந்து கிடந்த ஆரம்ப பள்ளியில் 2009 ம் ஆண்டு ரஞ்சித்சின்ஹா பணியில் சேர்ந்தார். பள்ளியில் மாணவர்களின் வருகையை அதிகரிக்க லேப்டாப் மூலம் வீடியோ, சினிமா போன்றவற்றை போட்டு காட்டினார். மாலை வேளையில் வீட்டிலேயே கல்வி கற்க தொலைபேசி மூலம் குறுந்தகவல்களை அனுப்பி வைத்தார். பெற்றோர்களிடம் பேசி அவர்களின் பிரச்சனைகளை கூர்ந்து கவனித்து ஆலோசனைகள் கூறி பிள்ளைகளை தவறாது பள்ளிக்கு அனுப்பி வைப்பதை ஊக்குவித்தார். பாடங்களை தாய்மொழியில் மொழிபெயர்த்தார். பெண்கள் கல்வி கற்பதை ஊக்குவித்தார். இதையெடுத்து இளம் வயதில் பெண் திருமணம் (பள்ளி பருவ சிறுமியர்) அக்கிராமத்தில் 100 சதவீதம் குறைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

புத்தகங்களில் க்யூ.ஆர். கோடு தொழில்நுட்பத்தை புகுத்தி மாணவர்கள் ஆடியோ, வீடியோ வாயிலாக பாடங்களை படிக்கும் முறையினை அறிமுகம் செய்தார். பிரச்சனைகளுக்கு உரிய இரு நாடுகளின் மாணவர்களை ஆன்லைன் வாயிலாக உரையாட வைத்து அவர்களிடம் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியையும் செய்து வருகிறார். இதில் இந்தியா, பாகிஸ்தான், பாலஸ்தீனம், இஸ்ரேல், ஈராக், ஈரான், அமெரிக்கா, வடகொரியா போன்ற நாடுகளைச் சேர்ந்த 19 ஆயிரம் மாணவர்கள் பங்கேற்றுள்ளனர்.

திரு.ரஞ்சித்சின்ஹா திசேல்
பரித்வாடி கிராமம், சோலாப்பூர் மாவட்டம்,
மஹாராஷ்டிரா மாநிலம். செல் : 94046 65096

## முல்லைவனம் இயற்கை வேளாண்மை பண்ணை

நான் கடந்த 5 வருடங்களாக முல்லைவனம் தற்சார்பு வாழ்வியல் பயிற்சி பட்டறையை நடத்தி வருகின்றேன். இந்த பயிற்சியில் 4 நபர்கள் வரை சேர்த்துக் கொள்கிறேன். இதில் அமிர்தக்கரைசல், திறன்மிகு நுண்ணுயிரி கலவை (நிலக்கடலை, அகத்தி போன்ற செடிகளிலிருந்து வேர் முடிச்சு எடுத்து மஞ்சள் நிற பழங்களான பப்பாளி, வாழை, மஞ்சள் பூசணியுடன் கலந்து 15 நாள் வைத்து தயார் செய்ய வேண்டும்), பஞ்சகவ்யா, பூச்சி விரட்டி (5 வகையான கசப்பு , பால் வரும் செடிகளை கொண்டு தயாரிப்பது) தயார் செய்யும் முறைகளை சொல்லித் தருகிறோம். இது தவிர தேவைப்படும் விவசாயிகளுக்கு பண்ணையில் மரங்கள், பாத்திகள் அமைப்பது போன்ற இயற்கை வடிவமைப்பு ஆலோசனை வழங்கி வருகின்றேன். ஆலோசனை தேவைப்படுவோர் என்னிடம் தொடர்பு கொள்ளலாம்.

பாலகிருஷ்ணன் ( பறவை பாலா)
முல்லைவனம் இயற்கை வேளாண்மைப் பண்ணை
ஆளவந்தான் கிராமம், குன்னத்தூர். களிமங்கலம் அஞ்சல், மதுரை – 625020. செல் : 9943431001

---

காருண்யா பல்கலைக்கழக மாணவர்களுக்கு கால்நடை மூலிகை வைத்தியப் பயிற்சி சேவா மையத்தில் நவம்பர் 2020ல் கொடுக்கப்பட்டது.



# உயிர்சக்தி வேளாண்மை பஞ்சாங்கம் – 2021

| மாதம் 2021 | சந்திரனும் சனியும் நேர் எதிராக | பௌர்ணமி | அமாவாசை | மேல் நோக்கு நாள் | கீழ்நோக்கு நாள் | தவிர்க்க வேண்டிய நாட்கள் | நிலா | | விதைக்கவும் / நடவு செய்யவும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | அண்மை நிலா | சேய்மை நிலா | விதை பழத்திற்காக (தனுசு மேஷம் சிம்மம்) | வேருக்காக (கன்னி மகரம் ரிஷபம்) | பூவுக்காக (மிதுனம் துலாம் கும்பம்) | இலைக்காக (கடகம் விருச்சகம் மீனம்) |
| ஜனவரி | 1, 28 | 29 | 13 | 13–26 | 27–31 | 11, 25 | 9 | 21 | 2,11,20,30 | 5,13, 23 | 7,15,25 | 9,18,27 |
| பிப்ரவரி | 25 | 27 | 12 | 9–23 | 1–8, 24–28 | 7, 21 | 4 | 18 | 7,16,26 | 1,9,19,28 | 3,12,21 | 5,14,24 |
| மார்ச் | 24 | 29 | 13 | 9–22 | 1–8, 23–31 | 6,20 | 2,30 | 18 | 6,16,25 | 9,18,28 | 2,11,21,30 | 4,13,23 |
| ஏப்ரல் | 21 | 27 | 12 | 5–19 | 1–4, 20–30 | 2, 16, 29 | 27 | 14 | 3,12,22,30 | 5,15,24 | 7,17,26 | 1,10,20,28 |
| மே | 18 | 26 | 12 | 2–16, 29–31 | 1, 17–28 | 13,27 | 26 | 12 | 9, 19, 27 | 2, 12,21, 29 | 4,14,23 | 7,17,25 |
| ஜூன் | 15 | 25 | 10 | 1–12, 26–30 | 13–25 | 9,23 | 23 | 8 | 5,15,24 | 8,18,26 | 1,11,20,28 | 3,13,22,30 |
| ஜூலை | 12 | 24 | 10 | 1–9 23–31 | 10–22 | 7,20 | 21 | 5 | 3,13,2130 | 5,15,23 | 8,17,25 | 10,19,28 |
| ஆகஸ்ட் | 8 | 22 | 8 | 1–6 20–31 | 7–19 | 3,16,30 | 17 | 30 | 9,18,26 | 2,11,20,29 | 4,13,22,31 | 7,15,24 |
| செப்டம்பர் | 4 | 21 | 7 | 1–2, 16–29 | 3–15, 30 | 12,26 | 11 | 27 | 5,14,23 | 7,16,25 | 10,18,28 | 3,12,20,30 |
| அக்டோபர் | 1, 29 | 20 | 6 | 13–27 | 1–12, 28–31 | 10,23 | 8 | 24 | 3,11,20,30 | 5,13,23 | 7,15,25 | 9,18,28 |
| நவம்பர் | 26 | 19 | 5 | 9–23 | 1–8, 24–30 | 6,19, | 6 | 21 | 7,16,26 | 1,9,19,29 | 3,12,21 | 5,14,24 |
| டிசம்பர் | 23 | 19 | 4 | 7–20 | 1–6, 21–31 | 3,17,31 | 4 | 18 | 5,14,24 | 7,16,26 | 1,9,19,28 | 3,11,21,30 |

நன்றி : www.biodynamics.in

## நம்வழி வேளாண்மைக்கு சந்தா விவரம் ;

| | வருட சந்தா ரூபாய் | ஆயுள் சந்தா ரூபாய் ; |
|---|---|---|
| நூலகங்கள் / நிறுவனங்கள் / கல்லூரிகள்/ கம்பெனிகள் | 200 | 2000 |
| விவசாயிகள் / தனிநபர்கள் | 150 | 1500 |
| தனிப்பிரதி | 30 | ---- |
| 15 வருட பிரதிகளின் தொகுப்பு (பைண்டிங் செய்தது ரூ. 1250) + ( கொரியர் செலவு ரூ. 250 ) | 1500 | ---- |

சந்தா தொகை மணியார்டர் அல்லது பாங்க் டிராப் மூலம் ''சேவா''
மதுரை என்ற பெயரில் எடுத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

வங்கியின் பெயர் –யூனியன் பேங்க் ஆப் இந்தியா
மதுரை – கோச்சடை கிளை
SB A/C No – 493902010004241
IFSC Code : UBIN0549398

சேவா
45, டி.பி.எம் நகர், விராட்டிபத்து
மதுரை – 625016
தொலைபேசி : 0452–2380082 , 2380943

Printed by A. Palaniappan at
Vivekananda Press
G-4, Industrial Estate, Madurai - 7

நூல் அஞ்சல்

பெறுநர்

-----------------------------------
-----------------------------------
-----------------------------------
-----------------------------------

Published and Edited by
P. Vivekanandan on behalf of
SEVA
45. T.P.M. Nagar
Virattipathu
Madurai - 625 016
(0452) 2380 082, 2380943
Email : vivekseva@gmail.com
website : www.sevango.in